5th November 1966]

சிறையில் கைதி சாவு

* 459 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திருச்சி மத்திய சிறையில் கைதி யாரேனும் அடிபட்டு இறந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதியன்று காலையில் அறைக்கதவு திறந்துவிடப்பட்டபின் வெளி வந்த ஆண்டிசாம்பன் என்ற கைதி ஆதிமூலம் என்பவரிடம் முறைதவறி நடந்துக்கொண்ட சில கைதிகளைக் கண்டித்தார். காலைக் கஞ்சி வழங்கப்படும்போது ஆண்டியினால் கண்டிக்கப்பட்ட கைதிகள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வகையில் அவரைத் தங்கள் கைகளால் நையப்புடைத்தனர். அடிபட்டதன் காரணமாய் அக்கைதி கீழே விழுந்தார். சிறைச்சாலை மருத்துவ மனைக்கு ஆண்டி எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிர் இழந்தார்.

திரு. செ. மாதவன் : கைதிகளைக் காலையில் திறந்துவிட்ட போது ஒழுங்காகச் சொல்லவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். கையினால் அடித்ததனாலே அவருடைய உயிர் போய் இருக்கக் கூடுமா ? இதுபற்றி மருத்துவ அதிகாரிகள் பரிசீலனை செய்தார்களா ? என்ன புலன் கண்டு பிடிக்கப்பட்டது ?

கனம் திரு. கோ. பூவராகன் : கஞ்சிக்கு வெளியில் விடப்பட்டார்கள். எல்லோரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். ஒருவரோடு ஒருவர் பேசுகையில் சட்டினி கேட்டார்கள். தகராறு முற்றி 6 பேர்களாகச் சேர்ந்து அடித்த காரணத்தினால் அவரது லங்ஸ் கிழிந்து இறந்திருப்பதாக டாக்டர்கள் பரிசோதனையின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

மீனவர் துயர்

* 460 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு தொழிலின்மையால் ஏற்பட்ட பஞ்சத்திற்கு நிவாரணமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

(இ) மீனவர்கள் மத்தியில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவன்கோடு தாலூகாக்களைச் சேர்ந்த ஒரு சில கிராமங்களில் 1965 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பலத்த காற்றுடன் விட்டு விட்டு மழை பெய்துகொண்டிருந்ததால் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல இயலவில்லை. இந்த மாதங்களுக்கு முந்திய மீன்பிடி பருவத்தின் போதும் மிகச் சொற்ப அளவில்தான் மீன்